**சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள்**

**முன்னிலை :** முனைவர்.சி.உஷாராணி,

**ந.க.எண்.127311/எச்1 /2019** **நாள். 26 .05.2020**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – **6** – மாணவர்கள் / பெற்றோர்கள் / பல்வேறு தரப்பிலிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் – ஏற்கனவே **01.06.2020** முதல் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட **2020** பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு தேர்வு பொதுத் தேர்வு கால அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ள விவரம் தெரிவித்தல் – அறிவுரை வழங்குதல் – சார்பு.

**பார்வை :** அரசுக் கடிதம் (MS) எண்: **46 / 2020–1**, நாள்: **19.05.2020**

---

கொரோனா வைரஸ் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகளை **01.06.2020** முதல் **12.06.2020** வரையும், **26.03.2020** அன்று நடைபெற இருந்த மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வினை **02.06.2020** அன்றும், **24.03.2020** அன்று நடைபெற்ற மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வினை கொரோனா வைரஸ் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை காரணமாக எழுதாத தேர்வர்களுக்கு மட்டும் **04.06.2020** அன்றும் நடைபெறுவதற்கான தேர்வுக் கால அட்டவணைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து தேர்வெழுதவுள்ள மாணவர்கள் / மாணவர்களின் பெற்றோர்கள் / சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு தரப்பிலிருந்து **01.06.2020** முதல் தொடங்கும் தேர்வுகளை ஒத்திவைக்கக் கோரிப் பெறப்பட்ட கோரிக்கையினை ஏற்று. மாணவர்களின் நலன் கருதி பார்வையில் காணும் அரசுக் கடிதத்தில் பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வுகளை **15.06.2020** அன்று தொடங்கும் வகையில் தேர்வுக் கால அட்டவணையில் மாற்றம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் 15.06.2020 முதல் 25.06.2020 முதல் நடைபெறும்.

2. வேதியியல், கணக்குப் பதிவியல், புவியியல் மற்றும் தொழிற்கல்வி கணக்குப் பதிவியல் (பழைய பாடத்திட்டம்) பாடங்களுக்கான **மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வு 16.06.2020 அன்று நடைபெறும்.**

3. வேதியியல், கணக்குப் பதிவியல் மற்றும் புவியியல் பாடங்களுக்கு வருகை புரியாதோருக்கான **மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) மறுதேர்வு 18.06.2020 அன்று நடைபெறும்.**

4. மேற்குறிப்பிட்டவாறு மாற்றம் செய்யப்பட்ட புதிய தேர்வுக்கால அட்டவணைகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

5. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு தேர்வுகளுக்கான கால அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ள விவரத்தினை, அவர்களது பள்ளிகளில் பயிலும் சம்பந்தப்பட்ட மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் தெரிவிக்குமாறு அறிவுறுத்தவேண்டும்.

6. பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு தேர்வுகளுக்கான புதிய கால அட்டவணைகள் அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளின் அறிவிப்பு பலகைகளிலும், அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. முதன்மைக் கல்வி அலுவலர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு தேர்வுகளுக்கான வினாத்தாள் கட்டுக் காப்பாளர்களுக்கும், தேர்வுகளுக்கான கால அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ள விவரத்தினை தெரிவிக்க வேண்டும்.

8. வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களில் 24 மணி நேரமும் ஆயுதம் தாங்கிய காவலர் பாதுகாப்பு பணியில் இருப்பதையும், கட்டுக்காப்பு மையங்களில் முதன்மைக் கல்வி அலுவலக பணியாளர் ஒருவர் பணியில் இருப்பதையும், முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்துக்கொள்ளவேண்டும்.

**இணைப்பு:** புதிய தேர்வுக்கால அட்டணைகள்

**ஓம்./–**
**இயக்குநர்**

பெறுநர்

1. அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. இணை இயக்குநர் கல்வி பாண்டிச்சேரி.
3. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்
4. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை –9
   – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. பள்ளிக் கல்வி ஆணையர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6
   – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. இயக்குநர் பள்ளிக் கல்வித் துறை, சென்னை–6
4. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை–6
5. இயக்குநர் மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6